2024 ஜூன் 29]

இயக்கப்படாமல் இருந்தனவோ, அந்தப் பகுதிகளில் இயக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்குப் பெரும் உதவியாக இருந்தன. இது கடந்தகால ஆட்சியிலே புறக்கணிக்கப்பட்டு இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அந்த மினி பேருந்துகளை மீண்டும் பழையபடி சிறப்பான முறையில் இயக்குவதற்கு ஒரு புதிய வரைவுக் கொள்கையை வகுத்து அளிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த மாதம் அதுகுறித்து உள் துறைச் செயலாளர் அவர்கள், மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தயிருக்கிறார்கள். அது முடிந்த பிறகு, புதிய மினி பேருந்துகளுக்கான வழித்தடங்கள் வழங்கப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தேவைப்படுகிற இடங்களுக்கு அவரே வழித்தடத்தை வாங்கி பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

திருப்பணி

***75395—திரு. கா. அண்ணாதுரை:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, ஆலத்தூர் ஊராட்சி, முசிறி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) முசிறி, அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் ஏற்கெனவே 5 பணிகள் மேற்கொள்ளப்பட்டு,

திருப்பணிகள் நடைபெறுகின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள், 2,000 கோயில்கள் குடமுழுக்கு என்ற இலக்கிலே இந்தத் திருக்கோயிலும் உள்ளது. ஆகவே, இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தத் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. கா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே ஒரத்தநாடு, கோனூர்நாடு, அம்புநாடு, பாப்பாநாடு, முசுவந்தநாடு என குறிப்பிட்ட எல்லைப் பகுதிகள் இன்றளவும் நாடு என்றே அழைக்கப்படுகின்றன. அந்த வகையிலே, முசுவந்தநாட்டிலே ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர், தஞ்சை மாவட்டம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய ஒரு பகுதியிலே இன்றைக்கு வாழ்கிறார்கள். அவர்களுக்குச் சொந்தமான இந்த அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் திருப்பணிக்கு முழுமையான நிதியை ஒதுக்கி, அதற்கான கட்டுமானப் பணிக்கு உதவியிருக்கிற மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு, அந்தப் பகுதி மக்களின் சார்பிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பட்டுக்கோட்டை தொகுதி, விக்ரமம் ஊராட்சி ஒரு பெரிய ஊராட்சி. அந்த ஊராட்சிக்குட்பட்ட அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கோரிய அந்தத் தியாகராஜ சுவாமி திருக்கோயிலினுடைய இராஜகோபுரம் கட்டுகின்ற பணியைப் பொறுத்தவரையில் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களுக்குத் தொல்லியல் துறையினுடைய அனுமதி பெற்ற பிறகு, அதற்கு வரைபடம், மண்டலக் குழு, மாநிலக் குழு ஒப்புதல் பெறவேண்டிய சூழல் இருக்கின்றது. ஆகவே, அந்தப் பணிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு, சாத்தியக்கூறுகள்

2024 ஜூன் 29]

இருப்பின், அத்துடன் மாண்புமிகு உறுப்பினருக்கு வைக்கின்ற வேண்டுகோள் என்னவெனில், அதற்குள்ளாக உபயதாரர் நிதிக்கு ஏற்பாடு செய்தால், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, புள்ளிவிவரத்தின்படி சொல்ல வேண்டுமென்றால், 54 இராஜகோபுரங்கள் சுமார் 105 கோடி ரூபாய் செலவிலே ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள இராஜகோபுரம் மறுக்கப்பட வேண்டுமென்ற நோக்கம் அல்ல. சாத்தியக்கூறுகள் இருந்தால், நிச்சயம் அவர் கோரிய இராஜகோபுரம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. கா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, காசாங்காடு கிராமத்தில் இருக்கிற அருள்மிகு முத்துமாரியம்மன் கோயிலுக்கு குறைந்த மதிப்பீட்டிலான ஒரு திருமண மண்டபம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காசாங்காடு முத்துமாரியம்மன் கோயில் பிரிவு 49 (1)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட சிறிய கோயில். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியிலே, ஏற்கெனவே, 8 கிலோ மீட்டர் தூரத்தில் கண்டேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில், 3 கோடியே 60 இலட்ச ரூபாய் செலவில், திருமண மண்டபம் கட்டுகின்ற பணி 70 சதவிகிதம் நிறைவுற்றிருக்கின்றது. இந்த ஆண்டு இறுதிக்குள் அந்தப் பணியை நிறைவு செய்து, திருமண மண்டபத்தை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர இருக்கின்றோம். அவர் கோரிய இடத்திலும், சாத்தியக்கூறு இருப்பின், உபயதாரர் நிதியின் வாயிலாக, அங்கேயும் திருமண மண்டபம் கட்டுவதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்வோம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, இந்த மூன்று ஆண்டுகளில் 350 கோடி ரூபாய் செலவிலே

97 திருமண மண்டபங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நடந்து வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு நகராட்சிக்குட்பட்ட, சுமார் 500 ஆண்டுகளுக்குமேல் பழமை வாய்ந்த, மிகவும் பிரசித்தி பெற்ற ஸ்ரீபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் தூக்கத் திருவிழாவினுடைய நிறைவுநாள் விழாவிற்கு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உள்ளூர் அரசு விடுமுறை வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள் எழுந்தவுடன், கன்னியாகுமரி தேவஸ்தானத்தின் கட்டுப்பாட்டில் வருகின்ற 490 திருக்கோயில்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், 490 கோயில்களில் விளக்கு எரியவும், அன்றாட ஆறுகால பூஜை நடக்கவும், திருக்கோயில் பணியாளர்களுடைய குறைந்த சம்பளத்தை உயர்த்துவதற்காகவும் 13 கோடி ரூபாய் அரசு மானியமாக இந்த ஆண்டு ஒதுக்கியதற்கு நன்றி தெரிவிப்பார் என்று கருதினேன். அதற்கு மாறாக, உள்ளூர் விடுமுறை கேட்டிருக்கின்றார். அதுகுறித்து மாவட்ட ஆட்சியர்மூலம் கருத்துரு வரப்பெறுமேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று அதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.*

2024 ஜூன் 29]

முற்பகல் 10–20

திரு. க. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின், 'ஒரு சட்டமன்றத் தொகுதியில் ஒரு விளையாட்டுத் திடல்' என்ற அறிவிப்பின்படி, இன்றைக்கு அந்த விளையாட்டுத் திடலை அமைப்பதற்கு இடமில்லாத காரணத்தினால் மதுரவாயல் அருள்மிகு மார்கசகாயஈஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் அந்தத் திடலை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அதற்கான கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தை அதற்காக ஒதுக்கித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் ஏற்பட்ட பிறகு, திருக்கோயில்களினுடைய நிலங்கள் ரூ.6,000 கோடி மதிப்பிற்கு மேலாக மீட்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலங்களை பல்வேறு வகைகளில் மறுபயன்பாட்டிற்காக, திருக்கோயிலினுடைய திருப்பணிகளுக்கு உதவிடும் வகையில், சட்ட விதிகளுக்குட்பட்டு பல துறைகளுக்குத் தற்போது வாடகைக்குக் கொடுத்து வருகிறோம். வாடகை கேட்பதற்கு முன்பாக பின்பற்ற வேண்டிய சட்ட விதிகள், அந்தத் துறையின் சார்பில், 'இந்த இடம் எங்களுக்குத் தேவை; இதற்குண்டான வாடகையை நாங்கள் செலுத்துகிறோம்' என்று குறிப்பிட்டு கருத்துரு அனுப்பினால், அது பரிசீலிக்கப்பட்டு, உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்கு வருவதற்கு அவற்றைத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முறை அறநிலையத் துறை மானியக் கோரிக்கையிலே கோவை தெற்குத் தொகுதியிலுள்ள அருள்மிகு இலட்சுமி நரசிம்மர் கோயிலுக்குத் தங்கத்தேர் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக, எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, ஆசியாவிலேயே மிகப் பெரிய விநாயகர், புலியகுளம் விநாயகர் கோயில் ஆகும். அந்தக் கோயிலுக்கு இராஜகோபுரம் அமைத்துத் தர வேண்டும். அதற்காக மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும் எனத் தங்கள் வாயிலாக அவரிடம் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், 8,962 திருக்கோயில்களுக்கு மாநிலக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில், 12 கோடி ரூபாய் அளவிற்குத் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கேட்காமல் கொடுக்கின்ற இந்த அரசு, கேட்டதெல்லாம் தருகின்ற நம் மாண்புமிகு முதல்வர் அவர்களால், உண்மையிலே மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்களுடைய கோரிக்கை சம்பந்தமாக, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானாமதுரை தொகுதியில் இளையான்குடி, தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயிலுக்கும், திருப்புவனம் மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயிலுக்கும் துறையின் சார்பாக நல்ல அறிவிப்புகளைத் தந்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2024 ஜுன் 29]

மானாமதுரை தொகுதியில் உள்ள ஆனந்தவல்லியம்மன் கோயில் நூறு ஆண்டுகள் பழமையான கோயில். அங்கு உபயதாரர்களால் திருத்தேர் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குத் துறையின் சார்பாக நிதியையும், அக்கோயிலுக்கான திருப்பணியையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்துதர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கோரிய திருத்தேரும், திருப்பணியும் உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவையான நிதி, பொதுநல நிதியிலிருந்து வழங்கப்பட்டு, உடனடியாக அவரது கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி, வெங்கடாம்பேட்டை ஊராட்சியில் ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த அருள்மிகு ஸ்ரீ வேணுகோபால் சுவாமி திருக்கோயிலில் உள்ள ஊஞ்சல் மண்டபம் பழுதடைந்து, கடந்த கால ஆட்சியில் புதுப்பிக்கப்பட்டது. பணி முடிந்த மூன்றே மாதங்களில் அதன் மேற்கூரை இடிந்து விழுந்துவிட்டது; நான்கு தூண்களும் பழுதடைந்துவிட்டன. எனவே, அந்த ஊஞ்சல் மண்டபத்தைப் புதுப்பித்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பழமைவாய்ந்த கோயிலில் திருத்தேர் இல்லை; திருத்தேரை அமைத்துக் கொடுக்கவும் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பண்ருட்டி வட்டம், மேல்காங்கேயன் குப்பம் அங்காளம்மன் கோயிலுக்கு ஓர் இராஜகோபுரம் அமைத்துத் தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களுக்குத்தான், இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 300 கோடி ரூபாயை அரசு நிதியாக வழங்கியிருக்கின்றார்கள். அவர் கோரிய அந்த ஊஞ்சல் மண்டபத்தை ஆவணப்படுத்துகின்ற பணி தற்போது தொல்லியல் துறையால் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அந்தப் பணி முடிவுற்றவுடன் அந்த மண்டபத்தை சீரமைத்துத் தருவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திருத்தேர் பணிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தங்கள் கோரப்பட இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திருத்தேர் மற்றும் ஊஞ்சல் மண்டபங்கள் போன்ற பணிகள் நிச்சயமாக இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

129—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***84245—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கடம்பை கிராமத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,